*Available online at:* [http://www.advancedscientificjournal.com](http://www.advancedscientificjournal.com)
[http://www.krishmapublication.com](http://www.krishmapublication.com)
*IJMASRI, Vol. 2, issue 1, pp. 320- 325, Oct. -2023*
https://doi.org/10.53633/ijmasri

**INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY ADVANCED SCIENTIFIC RESEARCH AND INNOVATION (IJMASRI)**

**ISSN: 2582-9130** **IBI IMPACT FACTOR 1.5** **DOI: 10.53633/IJMASRI**

**RESEARCH ARTICLE**

# விழுப்புரம் - அரசியல் வரலாற்றுப் பின்னணி

***முனைவர் S. சீனிவாசன்,***
*உதவிப்பேராசிரியர், வரலாற்றுத்துறை, திரு கொளஞ்சியப்பர் அரசுக் கலைக் கல்லூரி, விருத்தாசலம் – 606 001.*

## Abstract

*விழுப்புரம் மாவட்டத்தில் சித்தாமூர் முக்கியமான சமண சமயத் தலமாகத் திகழ்வதால் அதன் அரசியல் வரலாற்றுப் பின்னணியினைத் தெரிந்து கொள்வது மிகவும் அவசியமாகும். சித்தாமூரிலும், அதனை அடுத்துள்ள ஊர்களிலும் காணப்பெறும் கல்வெட்டுகளின் வாயிலாக இவ்வூரைப் பற்றிய வரலாற்றுண்மையினை ஓரளவு அறிய முடிகிறது. வெவ்வேறு அரச பரம்பரையினரின் ஆட்சியில் இப்பகுதி எந்த நிலையில் இருந்தது என்பதனையும், அக்காலத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தினையும், அதனால் சமயம், சமுதாயம் ஆகியவற்றில் ஏற்பட்ட விளைவுகளையும் இங்கு காண்போம்.*

## Introduction

*விழுப்புரம் மாவட்டத்தில் சித்தாமூர முக்கியமான சமண சமயத் தலமாகத் திகழ்வதால் அதன் அரசியல் வரலாற்றுப் பின்னணியினைத் தெரிந்து கொள்வது மிகவும் அவசியமாகும். சித்தாமூரிலும், அதனை அடுத்துள்ள ஊர்களிலும் காணப்பெறும் கல்வெட்டுகளின் வாயிலாக இவ்வூரைப் பற்றிய வரலாற்றுண்மையினை ஓரளவு அறிய முடிகிறது. வெவ்வேறு அரச பரம்பரையினரின் ஆட்சியில் இப்பகுதி எந்த நிலையில் இருந்தது என்பதனையும், அக்காலத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தினையும், அதனால் சமயம், சமுதாயம் ஆகியவற்றில் ஏற்பட்ட விளைவுகளையும் இங்கு காண்போம்.*

### கி.பி.ஏழாம் நூற்றாண்டிற்கு முன்பு

*சங்ககாலத்தில் திண்டிவனத்திற்குச் சிறிது தொலைவிலுள்ள மாவிலங்கை என்னுமிடத்தைத் தலைநகராகக் கொண்டு நல்லியக்கோடன் என்னும் குறுநில மன்னன் ஆட்சி புரிந்து வந்தான். இவன் அரசோச்சிய நாடு ஓய்மாநாடு என அழைக்கப் பெற்றதாகும். மிக்கவாறும் இந்த நாடு இப்போதைய திண்டிவனம், செஞ்சி முதலிய வட்டங்களை உள்ளடக்கியதாக இருந்திருக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை. நல்லியக்கோடனது ஆட்சியின் கீழ் சித்தாமூர் பகுதி எந்த நிலையில் இருந்ததென்பது பற்றிய செய்திகளை அறிவதற்கில்லை.*

*சித்தாமூருக்கு சிறிது தொலைவிலுள்ள தொண்டூர், நெகனூர்பட்டி ஆகிய இடங்களில் கிறித்தவ நூற்றாண்டின் தொடக்க காலத்தைச் சார்ந்த பிராமிக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவற்றில் பெருமுகை, அகலூர் போன்ற சமணத் தலங்கள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சித்தாமூர் பற்றிய செய்திகள் இடம்பெறவில்லை. இவைபோன்று செஞ்சியை அடுத்த திருநாதர் குன்றிலுள்ள கி.பி.5-6 ஆம் நூற்றாண்டைய கல்வெட்டிலும்[1] சித்தாமூர் குறிப்பிடப்படவில்லை. எனவே காலத்தால் முந்திய சங்க இலக்கியங்கள், பிராமிக் கல்வெட்டுகள் ஆகியவற்றின் வாயிலாகச் சித்தாமூரின் தொன்மையான வரலாற்றை அறிந்து கொள்ளும் வாய்ப்பில்லை. எனினும் அந்தக் காலக்கட்டத்தில் இங்கு தொடர்ந்து*

மக்கள் வசித்து வந்திருக்கின்றனர் என்பதை அண்மைக்கால அகழாய்வுகள் உறுதி செய்திருக்கின்றன. அந்தக் காலத்தில் இதற்குச் சித்தாமூர் என்னும் பெயர் அல்லது வேறு ஏதாவது பெயர் வழங்கப்பட்டிருந்ததா என்பது பற்றியும் அறிவதற்கில்லை.

**பல்லவர்கள்**

கி.பி. 7ஆம் நூற்றாண்டிலிருந்து 9ஆம் நூற்றாண்டு வரையிலும் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு பல்லவர்கள் ஆட்சி புரிந்து வந்தனர். இம்மன்னர்களது ஆட்சிக் காலத்தில் விழுப்புரம் மாவட்டம் தொண்டை மண்டலத்தினுள் அடங்கிய பகுதியாக இருந்தது. பல்லவர் காலக் குடைவரைக் கோயில்கள் செஞ்சித் தாலுகாவில் சிங்கவரத்திலும், தளவானூரிலும், மேலைச்சேரியிலும் காணப்படுகின்றன. மேலும் நந்திவர்ம பல்லவனது (கி.பி.802) கல்வெட்டொன்று செஞ்சிக்கு அண்மையிலுள்ள அருவாகூரில் இடம் பெற்றுள்ளது. இதில் அருவாகூர் சிங்கபுர நாட்டிலுள்ள ஒரு ஊர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.[2] இதற்கு பிறபட்ட காலக் கல்வெட்டுக்களில் சித்தாமூர், சிங்கபுரம், தாயனூர், தொண்டூர், மேல்சேவூர் முதலிய பல ஊர்களும், சிங்கபுர நாட்டைச் சார்ந்தவை எனக் கூறப்பட்டிருக்கின்றன. சித்தாமூரில் பல்லவர் காலக் கல்வெட்டுக்களோ அல்லது வேறு சான்றுகளோ காணப்படவில்லையெனினும், இவ்வூர் அம்மன்னர்களது ஆட்சிக்குட்பட்ட நிலப்பரப்புதான் என்பதில் ஐயமில்லை. ஆனால் அப்பல்லவர் காலத்தில் சித்தாமூர் என்னும் பெயருடன் குடியிருப்பு இருந்தது என்பதை விளக்கப் போதிய சான்றுகள் எவையும் இல்லை.

**சோழர்**

பல்லவப் பேரரசு வீழ்ச்சியடைந்த பின்னர் சோழப் பேரரசு வலிமை பெற்றுச் சிறப்புடன் தமிழகம் முழுவதையும் தனது ஆட்சிக்குள் கொணர்ந்தது. சோழ மன்னர்களாட்சியில் விழுப்புரம் மாவட்டத்தில் பல இந்து சமய, சமண சமயக் கோயில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இக்கோயில்களுக்குப் பல்வேறு தானங்கள் வழங்கியதையும் அறியக் கிடக்கிறோம். செஞ்சி தாலுகாவில் தாயனூர், மேல்சேவூர், பெருங்களத்தூர், வீரணாமூர், சித்தாமூர், எய்யில் முதலிய பல இடங்களில் சோழ மன்னர்களது கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

சித்தாமூரில் சோழர் காலக் கல்வெட்டுகள் ஐந்து காணப்படுகின்றன. முதலாவது கல்வெட்டு இராசகேசரி எனும் பட்டப் பெயர் கொண்ட முதலாம் ஆதித்தன் காலத்தையும் (கி.பி.888) அடுத்தது அவனது அரசியாகிய காடவர்கோள் பாவையினுடையதும், மூன்றாவது கல்வெட்டு இரண்டாம் இராசாதிராசன் காலத்தையும் (கி.பி.1173) சார்ந்தவையாகும். சோழராட்சியில் இங்குள்ள மலைநாதர் கோயில் திருவூராம் பள்ளி எனவும், காட்டாம்பள்ளி எனவும் பெயர் பெற்றிருந்தது. இக்கோயிலில் நந்தா விளக்கெரிக்க ஏற்பாடு செய்தமையையும் கோயிலுக்குப் பள்ளிச் சந்தமாக நிலங்கள் வழங்கியமையையும் இங்குள்ள கல்வெட்டுக்களின் வாயிலாக அறியவருகிறோம். மேலும் விக்கிரம சோழன் ஆட்சியில் சித்தாமூர் மடத்திற்கு (கோயிலுக்கு 2500 வராகன் மதிப்பிற்குரிய நிலங்கள் தானமாக வழங்கப்பட்டதாக மெக்கன்சி சுவடி குறிப்பிடுகிறது.[4] மேற்கூறப்பட்ட சான்றுகளிலிருந்து கி.பி.9ஆம் நூற்றாண்டிலேயே சித்தாமூர் சமண சமயத் தலமாகத் திகழ்ந்தது எனவும், இங்குள்ள மலைநாதர் கோயில் திருவூராம்பள்ளி, காட்டாம் பள்ளி என்னும் பெயர்களைக் கொண்டிருந்ததெனவும், சோழராட்சியில் இதற்குத் தானங்கள் வழங்கப்பட்டதெனவும் நன்கு தெரிய வருகிறோம்.

**சம்புவராயர்கள்**

சம்புவராய சிற்றரசர்கள் சோழப் பேரரசர்களுக்கு அடங்கி சித்தூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை ஆகிய மாவட்டப் பகுதிகளை ஆட்சிபுரிந்து வந்துள்ளனர். இப்பரம்பரையில் வந்த அரசர்களுள் பெருமானம்பி சம்புவராயர், செங்கேணி அம்மையப்பன் சம்புவராயர், ராசகம்பீர சம்புவராயர், எதிரிலிசோழ சம்புவராயர், வென்றுமண்கொண்ட சம்புவராயர், ராசநாராயணச் சம்புவராயர் முதலியோர் குறிப்பிடத் தக்கவர்களாகும். இரண்டாம் இராசாதிராசச் சோழனது ஆட்சிக் காலத்தில் (கி.பி.1773-ல்) செங்கேணி சம்புவராயர் சித்தாமூரிலுள்ள மலைநாதர் கோயிலுக்குப் பள்ளிச்சந்தமாக நிலங்கள் அளித்துள்ளதை கல்வெட்டொன்று வாயிலாக அறிகிறோம்.[5] இந்து சமயத்தைச் சார்ந்த இச்சிற்றரசன் சித்தாமூர் சமணக்கோயிலுக்குத் தானம் வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவே சம்புவராயர்களது ஆட்சியின் போதும் சித்தாமூர் கோயில் சிறந்த நிலையிலிருந்ததென்பது அறியற்பாலதாகும்.

**பாண்டியர்கள்**

சோழப்பேரரசு வலிமை குன்றி கி.பி.1257ல் முதலாம் சடாவர்ம சுந்தரபாண்டியனது ஆட்சியின் கீழ் வந்தது. செஞ்சிப் பகுதியில் தளவானூர், சிங்கவரம், எய்யில், தாழனூர் முதலிய பல இடங்களில் பாண்டியப் பேரரசர்களின் கல்வெட்டுகள் காணக்கிடக்கின்றன. இம்மன்னர்கள் சித்தாமூர் கோயிலுக்கு தானங்கள் வழங்கியதாக செய்திகள் எவையும் இல்லை. ஆனால் மாறங்கியூர் என்னுமிடத்திலுள்ள கோனேரின்மை கொண்டான் எனப்படும் மாறவர்மன் பராக்கிரம பாண்டியனது கல்வெட்டில் (கி.பி.1357) சித்தாமூர் இருங்கோளப்பாடி நாட்டிலுள்ள ஒரு ஊர் எனவும், இவ்வூரைச் சார்ந்த தியாகப் பெருமான் என்பவர் மாறங்கியூரிலுள்ள சிவன் கோவிலுக்கும் மடத்திற்கும் வழங்கப்பட்ட நிலங்களைக் கவனிக்கும் பொறுப்பேற்றிருந்தார். எனவும் கூறப்பட்டுள்ளது.[6]

இதிலிருந்து அக்காலத்தில் சித்தாமூரில் சைவ சமயத்தினரும் வாழ்ந்து வந்தனரென்ற செய்தி நன்கு புலப்படுகிறது.

**விசயநகர, நாயக்க மன்னர்கள்**

விசயநகர அரசர்களது ஆட்சியிலிருந்துதான் செஞ்சியும், அதனை அடுத்துள்ள பகுதிகளும் வரலாற்று முக்கியத்துவம் அதிகம் வாய்ந்த இடங்களாக திகழலாயின. முதலாம் விருபாக்ஷனது காலத்திலேயே (கி.பி.1383ல்) இப்பகுதி விசயநகரப் பேரரசர்க்குட்பட்டிருந்ததை ஆலம்பூண்டிச் செப்பேடும், சிங்கவரம் கல்வெட்டும் நன்கு அறிவுறுத்துகின்றன.[7] விசயநகரப் பேரரசர்கள் தங்களது பிரதிநிதிகளாகிய நாயக்கர்களைத் தமிழகத்தை ஆட்சி புரியுமாறு பணித்துள்ளனர். செஞ்சியில் நாயக்காராட்சி முதன் முதலில் கி.பி.1464-ல் ஏற்படத் தொடங்கியது. நாயக்கர் வழி வந்த வேங்கடபதி நாயக்கர் என்பவர் செஞ்சிப் பகுதியினை கி.பி.1478-ல் அரசு புரிந்தவர் எனவும் இவர் சமண சமயத்தவர்களை மிகவும் துன்புறுத்தியவர் எனவும் கூறப்படுகிறது. இரண்டாவது தேவராயரின் ஆட்சியின் போது (கி.பி.1433ல்) செஞ்சியில் அவரது பிரதிநிதியாக (மகா பிரதானியாக பெருமாள் தேவதண்ட நாயக்கர் பொறுப்பேற்றிருந்தார். அச்சயமத்தில் சித்தாமூர் இவரது பெயரால் மகாபிரதான பெருமாள் தேவதண்ட நாயகசதுர்வேதி மங்கலம் எனவு பெயரிடப்பட்டு, இறையிலி சர்வமானிய ஊராக அதாவது வரி செலுத்தப்பட வேண்டாத ஊராகத் திகழ்ந்தது. சதுர்வேதி மங்கலம் என்பது நான்கு வேதங்களையும் கற்றறித்த பிராமணர்களுக்குத் தானமாக வழங்கப்படும் ஊராகும். எனவே கி.பி.1453-ல் சித்தாமூர் மறையோதும் அந்தணர்களுக்குச் சர்வமானிய ஊராக அளிக்கப்பட்டதோடு, மகா பிரதான பெருமாள் தேவதண்ட நாயக சதுர்வேதிமங்கலம் எனப் புதுப்பெயர் கொண்டு விளங்கியிருக்கிறது.

கிருஷ்ணதேவராயர் காலத்தில் செஞ்சியை தலைநகராகக் கொண்டு துபாகி கிருஷ்ணப்ப நாயக்கர் என்பவர் நெல்லூரிலிருந்து தெற்கே கொள்ளிடம் நதி வரையிலுள்ள பகுதியினை ஆண்டு வந்தார். இவரைப் போன்று தஞ்சை, மதுரை ஆகிய பகுதிகளிலும் வெவ்வேறு நாயக்கர் ஆட்சி நிலவியது. செஞ்சியைத் தலைநகராகக் கொண்டு அரசோச்சிய நாயக்கர்களுள் முக்கியமானவர்கள் வையப்ப நாயக்கர் (கி.பி.1490), துபாகி கிருஷ்ணப்ப நாயக்கர் (கி.பி.1490-1520), அச்சுத விசய ராமச்சந்திர நாயக்கர் (கி.பி.1520-1540), முத்தியாலு நாயக்கர் (கி.பி.1540-1550), வெங்கடப்ப நாயக்கர் (கி.பி.1570-1600), வரதப்ப நயக்கர் (கி.பி.1600-1620). அப்ப நாயக்கர் முதலியவர்களாகும்.[10]

(இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அரசர்களது பெயர்களைப் பற்றியும் அவர்களது ஆட்சியாண்டுகள் பற்றியும் கருத்து வேறுபாடுகள் உள்ளன. வெங்கடப்ப நாயக்கரும் கிருஷ்ணப்ப நாயக்கரும் ஒருவரே எனவும், இவருக்குப் பின்னரும் கிருஷ்ணப்ப நாயக்கர் என்ற பெயரில் ஓரிருவர் ஆட்சி புரிந்தனர் எனவும் கூறப்படுகிறது.)

முத்தியாலு நாயக்கருக்குப் பின்னர் ஆட்சி புரிந்த வெங்கடப்ப நாயக்கர் சித்தாமூரில் சமணக் கோயில் கட்டுவதற்கு 80 வணிகருக்கு அனுமதியளித்ததாகக் இக்கோயில் இங்குள்ள பார்சுவநாதர் கோயிலாகத் தான் இருக்க கூறப்படுகிறது.[11] வேண்டும் என்பதில் ஐயமில்லை. பார்சுவநாதர் கோயில் மானஸ்தம்பத்திலுள்ள கல்வெட்டு, இந்த மானஸ்தம்பம் புஸ்செட்டி என்னும் வணிகரால் சக ஆண்டு 1500-ல் (கி.பி.1578ல்) நிறுவனப்பட்டதெனக் குறிப்பிடுகறது.[12] எனவே வெங்கடப்ப நாயக்கரின் ஆட்சிக் காலத்திலும் (கி.பி.1570-1600) பார்சுவ நாதர் கோயில் சிறப்புற்றிருந்தது என்பது தெளிவாகிறது.

சித்தாமூரிலுள்ள சன்னியாசிக் கல் என அழைக்கப்பெறும் கல்லில் காணப்படும் கல்வெட்டொன்றில் சக ஆண்டு 1503-ல் (கி.பி.1581-ல் கிருஷ்ணப்ப நாயக்கரின் பிரதிநிதியாகிய பொம்மையார் பிள்ளை என்பவர் சித்தாமூரை சிதம்பரேஸ்வரர் கோவிலுக்கு (சிதம்பரம் நடராசர் கோயில்) வழிபாட்டுச் செலவுகளுக்கென தானமாகக் கொடுத்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.[13] இவ்வாறு தானமாகக் கொடுக்கப்பட்ட நிலங்கள் சமணக் கோயில்களையும், அவைகளுக்குச் சொந்தமான பள்ளிச் சந்த நிலங்களையும் தவிர்த்து, எஞ்சிய பகுதியாக இருக்க வேண்டுமெனக் கூறலாம்.

நாயக்கராட்சி கி.பி.1639-ல் முடிவுற்று செஞ்சிப் பகுதியனைத்தும் முகமதியராட்சிக்குட்பட்டது. பின்னர் சிறிது காலம் இப்பகுதி மராட்டிய அரசர்கள் வசமிருந்தது. கி.பி.1690ஆம் ஆண்டு ஔரங்கசீப்பின் படைத்தலவனான ஜுல்பிக்கர்கான் செஞ்சியைக் கைப்பற்றி மக்களைத் துன்புறுத்தியும், அவர்களது செல்வங்களைக் கொள்ளையடித்தும் வந்தான். செஞ்சியை ஆண்ட மராட்டிய அரசன் ராஜாராம் (சாம்பாஜியின் தம்பி) தஞ்சையை ஆட்சி புரிந்த மராட்டிய மன்னன் இரண்டாம் ஷாஜிக்கு (Shaji) சித்தாமூர், திட்டைக்குடி, திருநாமநல்லூர், கல்லக்குறிஞ்சி, காட்டுமன்னார் கோயில், ஸ்ரீமுஷ்ணம், முதலிய பல ஊர்களை ஒற்றியாகக் கொடுத்திருந்தார். ஜூல்பிக்கர்கான் தஞ்சையரசர் ஷாஜியைத் தோற்கடித்ததன் விளைவாக அவர் சித்தாமூர் முதலான மேற்குறிப்பிட்ட ஊர்களனைத்தையும் ஜுல்பிக்கர் கானுக்கு விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று.[14] எனவே கி.பி.1700-ல் சித்தாமூர் இம்முகம்மதிய படைத் தளபதியின் கீழடங்கியிருந்தது.

இதற்குப் பின்னர் முஸ்லீம் படைத்தலைவனான தாவூத்கான் செஞ்சியிலிருந்து ஆர்க்காட்டிற்குத் தலைநகரை மாற்றியமைத்து ஆர்க்காட்டு நவாப் பரம்பரையினை நிலைபெறச் செய்தார். ஆர்க்காட்டு

நவாப்புகளுள் தாவூத்கான், சதத்துல்லாகான், சந்தாசாகிப், அலிதோஸ்த் முதலியவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாகும். பொதுவாக இவர்களது ஆட்சியில் மக்கள் இன்னலுற்றும், சைவ, வைணவ சமண சமயக் கோயில்கள் கண்காணிக்கப்படாலும் இருந்தன. முகமதியராட்சியில் சரிவரக் சித்தாமூர் மடத்திற்கு வழங்கப்பட்டு வந்த 100 வராகள் மானியங்கள் நவாப்புகளாட்சியில் 40 வராகன் அளவிற்குக் குறைக்கப்பட்டது. இதனை சமண சமயத்தவர் நவாப்பிடம் முறையிட்டதனால் பல்வேறு துன்பத்திற்கு ஆளாயிருக்கின்றனர்.[15]

மெக்கன்சி சுவடித் தொகுபினில் செஞ்சியை ஆட்சி புரிந்த மாதங்கா என்பவர் கொலியனூர் முதலிய பல இடங்களிருந்த சமாக் கோயில்களை அழித்து, அவ்வூர்களில் வாழ்ந்த சமணர்களைக் கொன்றதாகக் கூறப்பட்டுள்ளது. மேலும் அக்காலத்தில் சித்தாமூரிலுள்ள கோயில் பாழடைந்த நிலையில் இருந்ததாகவும் அறிய வருகிறோம். பின்னர் இப்பகுதியில் பஞ்சம் ஏற்பட்டமையால் இங்கு வாழ்ந்த சமணர் வேறு இடங்களுக்குச் சென்று வாழ வேண்டியதாயிற்று.[16] இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாதங்கா என்பவர் எப்போது ஆட்சி செய்தார் என்பதைப் பற்றியோ அல்லது அவரது வரலாறு பற்றியோ வேறு செய்திகள் எவையும் அறிந்து கொள்வதற்கில்லை.

பிரஞ்சுக்காரர்கள் கி.பி. 1750ல் பெரும்படையுடன் வந்து போரிட்டு செஞ்சியைக் கைப்பற்றினர். இப்போரின் போது ஒரு படைப் பிரிவினர் கிழக்கில் சித்தாமூரைச் சுற்றியுள்ள ஊர்கள் வரையிலும் தங்கியிருந்ததாகக் கூறப்படுகிறது.[17] கி.பி.1761ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களுக்கும், பிரஞ்சுக்காரர்களுக்கு மிடையே போர் மூண்டு, அதில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றமையால் செஞ்சிப் பகுதி ஆங்கிலேயராட்சியின் கீழ் வந்தது. இவர்கள் ஆட்சியில் சித்தாமூர்க் கோயில் முக்கியத்துவம் வாய்ந்த கோயிலாக கருதப்பட்டமையால் 60 வராகன் மானியத்தை மட்டும் பெற்று வந்திருக்கிறது.[18] இக்கோயிலின் கோபுரம் கி.பி. 1865ஆம் ஆண்டு பொதுமக்களிடமிருந்து பெற்ற பண உதவியினால் அப்போது மடாதிபதியாக இருந்த அபிநவ ஆதிசேனபட்டாரகரது அரும் முயற்சியால் கட்டி முடிக்கப் பெற்றது.[19]

இவ்வாறு சோழர் காலத்திலிருந்து சித்தாமூர் சமண சமயத் தலமாகத் திகழ்ந்து, சோழரின் ஆதரவினையும் பிற அரசர்களின் ஆதரவினையும் பெற்று விளங்கியிருக்கிறது. விசயநகர மன்னர்களின் பிரதிநிதிகளாகிய நாயக்கர் காலத்தில் பார்சுவநாதர் கோயில் புதுப்பிக்கப் பெற்று சமண சமயம் மேலும் வளர்ச்சியடைந்தது. முகமதியர் காலத்திலும், நவாப்புகளாட்சியிலும், அதற்குப் பின்னர் ஆங்கிலேயராட்சியிலும் இக்கோயில்கள் நன்றாக கண்காணிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இவ்வாறிருந்த பின்னரும் பல இடையூறுகளைத் தாங்கி இக்கோயில்களும் இங்குள்ள மடமும் நல்ல நிலையில் இருந்து வருகின்றன. தமிழகத்தில் பிற இடங்களிலிருந்த மடங்கள் சுவடு தெரியாத வண்ணம் அழிந்த பின்பும், சித்தாமூர் மடம் மட்டிலும் இன்றுவரை நல்ல முறையில் இயங்கி வருகிறது.

**ஆட்சிப் பிரிவுகள்**

பல்லவ, சோழ, பாண்டியராட்சியில் தமிழகம் மண்டலம். கோட்டம், கூற்றம், வளநாடு, நாடு, ஊர் முதலிய ஆட்சிப் பிரிவுகளைக் கொண்டிருந்தது. இவை தற்காலத்தில் மாநிலம், மாவட்டம், தாலுகா, பஞ்சாயத்து, ஊர் என்னும் பிரிவுகள் இருப்பதைப் போன்றவை என்று பொதுவாகக் கூறலாம். பல்லவர் காலத்தில் தொண்டை மண்டலம் இருபத்தி நான்கு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. செஞ்சியும், அதனைச் சார்ந்த பகுதிகளும் பல்குன்றக்கோட்டத்தைச் சார்ந்தவையாகும். மேலும் இக்கோட்டத்தின் உட்பிரிவாகிய சிங்கபுர நாட்டில் சிங்கவரம், சித்தாமூர் முதலிய பல ஊர்கள் அடங்கியிருந்தன. சிங்கபுரநாடு என்னும் நாட்டுப் பிரிவு முதன்முதலில் தந்திவர்ம பல்லவனது கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.[20] சித்தாமூரில் பல்லவர் காலக் கல்வெட்டுகள் இல்லையெனினும் வேறு இடங்களிலுள்ள சற்றுப் பிற்காலக் கல்வெட்டுக்களிலிருந்து இப்பகுதி பல்குன்றக் கோட்டத்திலுள்ள சிங்கபுரநாட்டைச் சார்ந்தது என அறிய வருகிறோம்.

சோழப் பேரரசர்களது ஆட்சியின்போது தொண்டை மண்டலம் ஜெயங்கொண்ட சோழமண்டலம் என அழைக்கப் பெற்றது.[21] இந்த மண்டலத்தில் உத்தமசோழ வளநாட்டின் பிரிவாகிய சிங்கபுர நாட்டிலுள்ள தேவனூர், மேல்சேவூர், சிங்கவரம், பெருங்களத்தூர், தாயனூர், தொண்டூர், வீரணாமூர் முதலியவை இருந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இவை சித்தாமூருக்கு அண்மையிலுள்ள ஊர்களாகும். சித்தாமூரிலுள்ள சோழர் கல்வெட்டுகளில் உத்தம சோழ குறிக்கப்படவில்லையாயினும் இவ்வூர் சிங்கபுர நாட்டுக் வளநாடு கீழ்வழியிலுள்ள ஊர் எனக் கூறப்பட்டுள்ளது.[22] அதாவது சிங்கபுர நாட்டுப் பிரிவில் கிழக்கு வழியாகச் செல்லும் சாலையில் அமைந்த ஊர் சித்தாமூர் என்பதாகும். இச்சாலை தற்போது செஞ்சியிலிருந்து திண்டிவனத்திற்கு வல்லம் வழியாகச் செல்லும் சாலையாக இருக்கலாம்.

பாண்டியராட்சியிலும் சிங்கவரம் முதலிய ஊர்கள் ஜெயங் கொண்ட சோழ மண்டலத்தில், பல்குன்றக் கோட்டத்திலுள்ள சிங்கபுரநாட்டைச் சார்ந்தவையாகவே இருந்திருக்கின்றன.[23] சித்தாமூரில் பாண்டியர் கல்வெட்டுகள் இல்லையெனினும் அக்காலத்தில் இவ்வூர் மேற்குறிப்பிடப்பட்ட ஆட்சிப் பிரிவுகளுக்குட்பட்டதுதான் என்பதில் ஐயமில்லை. ஆனால் மாறவர்மன் பராக்கிரம பாண்டியனது ஆட்சிக்காலத்தில் (கி.பி.1357ல்) சித்தாமூர்

இருங்கோளப்பாடி நாட்டுப் பிரிவினைச் சார்ந்த ஊர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.[24] இப்பெயர் சிங்கபுர நாட்டிற்குப் பதிலாக இடப்பட்ட பெயரா அல்லது வேறுபல ஊர்களை இணைத்துப் புதியதாக ஏற்படுத்தப்பட்ட நாட்டுப் பிரிவின் பெயரா என்பதனை உறுதி செய்வதற்குப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை.

சிங்கபுரநாடு என்ற பெயர் செஞ்சியை அடுத்துள்ள சிங்கவரம் (சிங்கபுரம்) என்னும் ஊரின் பெயரடிப்படையில் தோன்றியிருக்க வேண்டும். சிங்கவரத்திலுள்ள கி.பி.ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த வடமொழிக் கல்வெட்டு இவ்வூரை சிம்ஹபுரம் (சிங்கபுரம்) என்று குறிப்பிடுகிறது.[25] மிக்கவாறும் சிம்மவிஷ்ணு என்னும் பட்டப்பெயரைக் கொண்ட முதலாம் நரசிம்ம பல்லவன் (மாமல்லன்) காலத்தில் அவனது பட்டப் பெயரை ஒட்டி இவ்வூர் தோற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும்.[26] இம்மன்னனது கலைப்பாணியிலேயே இங்கு குடைவரைக் கோயில் உருவாக்கப்பட்டிருப்பதும் இக்கருத்தினை மேலும் வலியுறுத்துவதாக உள்ளது. இதே சிங்கபுரம் சிங்கபுர நாட்டிலுள்ள ஊர் எனவும் கல்வெட்டுகள் இயம்புகின்றன. எனவே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சிங்கபுரம் என்னும் ஊரின் பெயரே நாட்டுப் பிரிவிற்கும் வழங்கப்பட்டிருக்கிறதென்று தெளிவாகிறது.

கி.பி.15ஆம் நூற்றாண்டில் இரண்டாவது தேவராயரது ஆட்சியின் போது (1433-ல்) சித்தாமூர் பெண்ணையாற்றின் வடகரையிலுள்ள உடைக்காடு நாட்டுப் பிரிவினைச் சார்ந்த ஊராகத் திகழ்ந்திருக்கிறது.[27] கி.பி.16ஆம் நூற்றாண்டிலும் இது உடைக்காடு நாடு என்றழைக்கப்பட்ட திருக்கோவலூர் பற்றில் இருந்ததாகவே கூறப்பட்டிருக்கிறது. மேலும் இவ்வுடைக்காடு நாடு, திருவதி ராஜ்யத்தில் வழுதிலம்பட்டு சாவடியைச் சார்ந்த திருமுனைப்பாடி நாட்டின் ஒரு பிரிவாக விளங்கியது எனவும் அறியக் கிடக்கிறோம்.[28] திருவதிகையை மையமாகக் கொண்ட இராஜ்ஜியப் பகுதியே திருவதி இராஜ்ஜியம் என நாயக்கர் ஆட்சியில் அழைக்கப் பெற்றது.[29] வழுதிலம்பட்டுச் சாவடி என்பது சிதம்பரம் உள்ளிட்ட பகுதியினைக் குறிப்பதாகும். திருமுனைப்பாடி நாடு அக்காலத்தில் திருநாவலூர், திருவெண்ணெய்நல்லூர் முதலிய பல ஊர்களைக் கொண்ட பகுதியாகும்.[30] உடைக்காடு நாடு எனப்படுவது பெண்ணையாற்றிற்கு வடக்கில் அறகண்டநல்லூர், தேவனூர், சித்தாமூர், வயிரமேகச் சதுர்வேதி மங்கலம், கிங்கிலிவாடி முதலிய பல்வேறு ஊர்களை உள்ளடக்கிய நாட்டுப் பிரிவாகும்.[31]

விழுப்புரம், திருவண்ணாமலை மாவட்டங்களிலுள்ள கல்வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது, சித்தாமூர் கி.பி.9லிருந்து 13ஆம் நூற்றாண்டு வரை சிங்கபுர நாட்டிலும், கி.பி.14ஆம் நூற்றாண்டில் இருங்கோளப்பாடி நாட்டிலும், பின்னர் கி.பி.15ம் நூற்றாண்டிலிருந்து உடைக்காடு நாட்டுப் பிரிவிலும் இருந்திருப்பதை அறிய வருகிறோம். குறிப்பாக எந்த ஆண்டிலிருந்து எந்த ஆண்டு வரை இந்தப் பெயர்கள் வழங்கப்பட்டன என்றோ அல்லது எதற்காக இந்த மாற்றங்கள் செய்யப்பட்டன என்றோ உறுதியாகக் கூறுவதற்கில்லை. மேலும் முன்பு சிங்கபுர நாடு என அழைக்கப்பட்ட பகுதிக்குத்தான் பின்னர் இருங்கோளப்பாடி நாடு, உடைக்காடு நாடு என்று பெயர் மாற்றம் செய்யப் பட்டதாகவும் சொல்வதற்கில்லை. கி.பி.15ஆம் நூற்றாண்டில் பெண்ணையாற்றிற்கு வடக்கிலுள்ள பல ஊர்களை ஒன்று சேர்த்து அதற்குப் புதியதாக உடைக்காடு நாடு எனப் பெயரிடப்பட்டதாகத் தெரிகிறது. சித்தாமூரும் இதில் இணைக்கப்பட்ட ஊராகும். இருங்கோளப்பாடி நாடு என்னும் பிரிவும் இவ்வாறே ஏற்பட்டதாக இருக்கலாம். ஆனால் அதனை உறுதிப்படுத்தப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. பொதுவாக ஒரு அரச பரம்பரையினர் ஆட்சி புரிந்தபோது ஊர்களுக்கு இடப்பட்ட பெயர்கள் பின்னர் வந்த ஆட்சியாளர்களால் மாற்றம் செய்யப்படுவதும், சில சமயத்தில் ஆட்சிப் பிரிவுகளின் எல்லைகள் மாற்றியமைக்கப்படுவதும் பண்டைக் காலத்திலேயே இருந்த வழக்கமாகும். இதுபோன்று பல்வேறு காரணங்களால் பெயர் மாற்றம் ஏற்பட்டு வருவதை இன்றும் காணலாம்.

**அடிக்குறிப்புகள்**


1. ARE, 238/1904
2. S11, vol XII, No.42
3. S11, vol VII, Nos. 828, 829, 830
4. Mackenzie Manuscripts, (ed. T.V.Mahalingam) Mss. No.11, Sec.5
5. S11, Vol. VII, No.830
6. ARE, 102/1935-36
7. Epigraphia Indica (E.C.), vol. III, PP. 224-229 and ARE, 234/1904.
8. Gazetter of South Arcot District, P.77ARE 61,64/1935-36
9. C.S.Srinivasachari, A History of Gingee and its rulers, p.82
10. Ibid, p.89.
11. ARE, 517,518/1937-38
12. ARE, 68/1935-36
13. C.S.Srinivasachari, Op. cit, p316
14. Mackenzie Manuscripts, Mss 11, Sec.5
15. Ibid, Mss. 12, Sec 8
16. C.S.Srinivasachari, Op. cit, p 513 Notes.
17. Mackenzie Manuscripts, Mss. 11 Sec.5
18. ARE, 520/1937-38
19. S11, vol. 12, No.42
20. ARE 360/1909, 221, 231/1904, 241/1927-28, 520/1937-38, 83/1934-35.
21. S11, vol. VII No.828
22. ARE, 231, 226/1904
23. ARE, 102/1935-36

24. *ARE, 284/191*
25. *K.R. Srinivasan, Cave temples of the Pallavas, p.115.*
26. *ARE, 61/1935-36*
27. *ARE, 8/1935-3*
28. *ARE, 41/1922*
29. *ARE, 310, 311/1902*
30. *ARE, 67, 68/1935-36, 232/1902, S11 vol. VII, Nos. 1018, 1023*


*********



©2023 by KRISHMA PUBLICATION